# 11

# கொடுத்தலுக்கான தெய்வீக ஊக்குவிப்புகள்

## (2 கொரிந்தியர் 8; 9)

*மறு ரூபமான வாழ்வு என்பது*
*கொடுத்தலின் வாழ்வாக உள்ளது*

ஒவ்வொரு கிறிஸ்தவரும் தாம் கொடுக்கவேண்டும், தாம் பெற்றுக்கொண்டுள்ள வளத்திற்குத் தகுந்தாற்போல் கொடுக்க வேண்டும் என்று தம்மிடத்தில் தேவன் எதிர் பார்க்கிறார் என்பதை அறிந்திருக்கிறார். நாம் கொடுக்க வேண்டுமா இல்லையா என்பதல்ல, ஆனால் நாம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதே நமது அக்கறைக்குரிய கேள்வியாக உள்ளது. மற்றும் ‘‘எவ்வளவு’’ கொடுக்க வேண்டும் என்பது, ‘‘ஏன்’’ என்பதைச் சார்ந்துள்ளது. கிறிஸ்தவர்கள் தேவனுக்குக் கொடுக்க வேண்டுவதற்கான நோக்கங்கள் யாவை?

மற்றவர்கள் கொடுக்க வேண்டும் என்று பிரசங்கியார்கள் புத்தி கூறும்போது, அவர்கள் பல்வேறு நோக்கங்களுக்காக, எடுத்துக்காட்டாக, “நிதி நிலையைச் சந்திக்க’’ அல்லது பரலோகம் செல்ல அல்லது நரகம் செல்வதைத் தவிர்க்க என்பவற்றிற்காக வேண்டுகோள் விடுக்கலாம். சிலவேளைகளில் தகுதியற்ற ஊக்குவிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன: எடுத்துக்காட்டாக, நமது கொடுத்தலைப் பற்றி தற்பெருமை பேசுவதற்காக. ஆனால் நாம் ஏன் கொடுக்க வேண்டும் என்பது பற்றித் தேவன் நமக்குக் கூறுகிறார் என்றால், அந்த ஊக்குவிப்புகள் தகுதியானவை என்று நாம் நிச்சயமாய் நினைக்க முடியும். தேவன் நம்மிடத்தில், “ஏன்’’ கொடுக்க வேண்டும் என்று கூறும்போது, நாம் அதற்குக் கவனம் செலுத்துதல் மிகச்சிறந்ததாக இருக்கும்!

அப்படிப்பட்ட ஊக்குவிப்புகளைத் தேவன் எப்போதாவது அளிக்கிறாரா? அவர் 2 கொரிந்தியர் 8 மற்றும் 9ம் அதிகாரங்களில் அதைச் செய்கிறார். இந்த இரண்டு அதிகாரங்களிலும் பவுல், தேவனுடைய ஏவுதலினால், கொரிந்துவில் இருந்த சபைக்கு, அவர்கள் எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களின் தேவைகளைச் சந்திக்கக் கொடுக்க வேண்டும் என்று ஒரு ஆண்டிற்கு முன்னதாக ஏற்படுத்தியிருந்த திட்டங்களைச் செயல்படுத்துமாறு அவர்களை ஊக்குவிக்க எழுதுகிறார். அவர் வேண்டுகோள் விடுப்பதற்கான நோக்கம், கொடுப்பதற்காக தேவன் அளிக்கும் ஊக்குவிப்புகளாக உள்ளன. அவைகள் *கொடுத்தலுக்கான தெய்வீக ஊக்குவிப்புகளாக* உள்ளன. அந்த ஊக்குவித்தல்களைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக.

## கொடுத்தல் என்பது ஒரு கிருபையாக இருப்பதால் நாம் உதாரத்துவமாகக் கொடுக்க வேண்டும்

2 கொரிந்தியர் 8ம் அதிகாரத்தைப் பவுல் பின்வருமாறு கூறித் தொடங்குகிறார்: "அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்" (வசனம் 1). இவ்விடத்தில் பவுல், மக்கெதோனியரின் கொடுத்தலை "தேவனுடைய கிருபை" என்ற வகையில் பேசுகிறார் (வசனம் 1).

2 கொரிந்தியர் 8 மற்றும் 9ம் அதிகாரங்களில், பவுல் கொடுத்தலைத் தேவனுடைய கிருபை என்பதாகப் பேசுகிறார். பரிசுத்தவான்களுக்கான இந்தப் பங்களிப்பை அவர், "தர்மகாரியம்" என்ற சொல்விளக்கம் கொண்டு விவரிக்கிறார் (8:6, 7, 19; 9:14). உண்மையில், பவுல் "கொடுத்தல்" மற்றும் "கிருபை" ஆகியவற்றை ஏறக்குறையச் சமானப்படுத்துகிறார். 2 கொரிந்தியர் 8:19ல், அவர் "ஊழியத்தினாலே சேர்க்கப்படும் தர்மபணத்தை" என்று பேசுகிற விஷயத்தை, அடுத்த வசனத்தில் அவர், "இந்த மிகுதியான தர்மப்பணத்தை" என்று விவரிக்கிறார்.

பவுல், கொடுத்தலை கிருபையுடன் சமானப்படுத்துவதாகக் காணப்படுகையில், அவர் அர்த்தப்படுத்துகிறது என்ன? அந்தக் கேள்விக்குக் குறைந்தபட்சம் இரண்டு பதில்கள் உள்ளன. *தேவன் நமக்குக் கொடுக்கும் திறனை அருளுகிறார்.* கொடுத்தல் என்பது கிருபையாக உள்ளது, அதற்குள் அது ஒரு வரமாக உள்ளது. தேவன் நம்மைக் கொடுக்கக் கூடியவர்கள் ஆக்கியதால் மாத்திரமே நாம் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். இதை அவர் எவ்வாறு செய்கிறார்? நாம் கொண்டுள்ள எல்லாவற்றையும் அவர் நமக்குக் கொடுக்கிறார். மேலும் அவர், கொடுப்பதற்கான விருப்பத்தையும் நமது இருதயங்களில் வைக்கிறார். *நமது கொடுத்தல் மூலமாகத் தேவன் தமது கிருபையைக் காட்சிப்படுத்துகிறார்.* ஏழைகளுக்கு உதவுதல் மற்றும் இழந்து போகப்பட்டுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் ஆகியவற்றைக் கொண்டு தேவன் செய்ய விரும்புபவற்றை, அவர் நம் மூலமாகச் செய்கிறார். நாம் செய்கிற நன்மை தேவன் செய்கிறதாக உள்ளது. இவ்வாறாக, நமது கொடுத்தலின் காரணமாக மனிதர்கள் தேவனை ஸ்தோத்திரிக்கின்றனர் (2 கொரிந்தியர் 9:11-14). தேவன் எவ்வகைப்பட்டவராக இருக்கிறார்? அவர் கொடுக்கிறார்; அவர் அன்பாக இருக்கிறார்; அவர் கிருபையுள்ளவராக இருக்கிறார். அதை மற்றவர்கள் எவ்வாறு அறிவார்கள்? அவருடைய பிள்ளைகளாகிய நாம் நம்மிடத்தில் உள்ளவற்றைத் தாராளமாகக் கொடுப்பதினால் செயல்விளக்கப்படுத்தினால் மாத்திரமே தேவன் எவ்வகைப்பட்டவராக இருக்கிறார் என்பதை அவர்கள் அறிவார்கள்.

## மக்கெதோனியர்களின் உதாரணத்தின் காரணமாக நாம் உதாரத்துவமாகக் கொடுக்க வேண்டும்

2 கொரிந்தியர் 8:1-7ல், மக்கெதோனியர்களின் உதாரணம் பற்றிய நான்கு விஷயங்களைக் கவனியுங்கள்.

## அவர்கள் கொடிய தரித்திரத்திலும் கொடுத்தார்கள்

*நாம் தக்க விகிதத்தில் கொடுக்க வேண்டும் என்று அறிகிறோம் (1 கொரிந்தியர் 16:1, 2), மற்றும் இவ்வாறாக நாம் தாராளமாகக் கொடுத்தலுக்கான விதியைப் பற்றி நினைக்கிறோம்: செல்வம் கூட்டல் கடமை என்பது தாராளத் தன்மைக்குச் சமமாகிறது. அதாவது, ஒரு கிறிஸ்தவர் செல்வந்தராக இருந்தால், அவரது கடமை உணர்வு அவரைத் தாராளமாகக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தும். ஆனால் இவ்விடத்தில் காணப்படும் விதியானது வேறுபட்டுள்ளது: சந்தோஷம் கூட்டல் தரித்திரம் என்பது தாராளத் தன்மைக்குச் சமமாகிறது! இந்த மக்கெதோனியர்கள் செல்வந்தர்களாக இருக்கவில்லை! உண்மையில் அவர்கள், "மிகுந்த உபத்திரவம்" மற்றும் "கொடிய தரித்திரம்" ஆகியவற்றை அனுபவித்துக் கொண்டிருந்தனர்; இருப்பினும் "அவர்களின் பரிபூரண சந்தோஷம்" கூட்டல் அவர்களின் தரித்திரம் என்பது "உதாரத்துவத்தின் செல்வத்தை" விளைவித்தது!*

*இதிலிருந்து நாம், கர்த்தருக்குத் தாராளமாகக் கொடுப்பதற்கு நாம் செல்வந்தர்கள் ஆகும்வரை காத்திருப்பதை அவர் நம்மிடம் எதிர்பார்ப்பதில்லை என்று கற்றுக்கொள்ள முடிகிறது. ஏழை விதவை இரண்டு செப்புக்காசுகள் மாத்திரமே கொண்டிருந்தபோதிலும் அவள் தாராளமாகக் கொடுத்தாள் (லூக்கா 21:1-4). அவளது விஷயத்திலும்கூட, சந்தோஷம் கூட்டல் வறுமை என்பது தாராளத்தன்மைக்கு சமமாயிற்று.*

*உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுப்பதற்கு, அதிகமான பணத்தைக் கொண்டிருக்கும் வரையில் நீங்கள் காத்திருக்கிறீர்களா? பிரசங்கியாரிடத்தில் பின்வருமாறு கூறிய மனிதரைப் போன்று நீங்கள் இருக்கலாம்: "எனக்கு இருபது இலட்சம் ரூபாய் இருந்தால், அதில் பத்து இலட்சம் ரூபாயைக் கர்த்தருக்கென்று கொடுப்பேன்." அதற்குப் பிரசங்கியார் "அது நல்லது ஜான். ஆனால் நீங்கள் இரண்டு பன்றிகளைக் கொண்டிருந்தால் என்ன செய்வீர்கள்?" "ஆ, அது நியாயமானதல்ல. நான் இரண்டு பன்றிகளை வைத்திருக்கிறேன் என்று நீங்கள் அறிவீர்களே." நாம் இருபது இலட்சம் ரூபாய்களைக் கொண்டிருக்கும் வரையில் காத்திராது இருப்போமாக; இப்போது நம்மிடத்தில் உள்ளவற்றில் இருந்து நாம் தாராளமாகக் கொடுக்கத் தொடங்குவோமாக!*

### அவர்கள் உதாரத்துவமாகக் கொடுத்தனர்

*அவர்களின் பரிபூரண சந்தோஷமும் கொடிய தரித்திரமும் "மிகுந்த உதாரத்துவமாக" பொங்கிப் பெருகிற்று! அவர்களின் உதாரத்துவத்தைப் பவுல், கொரிந்தியர்கள் உதாரத்துவமாகக் கொடுப்பவர்கள் ஆவதற்குப் பயன்படுத்தினார்.*

*அந்த வகையான கொடுத்தலையே தேவன் விரும்புகிறார். சாஸ்திரிகள் உதாரத்துவமாகக் கொடுத்தனர் (மத்தேயு 2); பெத்தானியாவில் இருந்த மரியாள் உதாரத்துவமாகக் கொடுத்தாள் (யோவான் 12:1-8); பகிர்ந்து கொடுக்கிறவர்கள் அதை உதாரத்துவமாகச் செய்யுமாறு கூறப்பட்டனர் (ரோமர் 12:8). நீங்கள் போதுமான அளவு கொடுக்கிறீர்களா என்று அறிய வேண்டுமென்றால், உங்களையே பின்வருமாறு கேட்டுக்கொள்ளுங்கள்: "நான் உதாரத்துவமாகக் கொடுக்கிறேனா?" உங்கள் கொடையை ஒரு உதாரத்துவமான கொடை என்ற வகையில் உங்களால் தற்காக்க இயலவில்லை என்றால், அது தேவனைப்*

பிரியப்படுத்துவதாக இருத்தல் அரிது!

***அவர்கள் சுயாதீனமாக, மனவிருப்பத்துடன் கொடுத்தனர்***

அவர்கள் எவ்வாறு கொடுத்தனர் மற்றும் அவர்களின் கொடுத்தல் "பாணி" நம்முடையதில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை மதித்து உணருவதற்கு, இன்றைய நாட்களில் பெரும்பான்மையான சபைக்குழுமங்களில் கொடுத்தல் பற்றி நடப்பது என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். ஒரு தேவை எழுகிறது. அது ஒருவேளை, ஒரு வாரந்தர நிதிநிலையைச் சந்திக்க வேண்டிய தேவையாக இருக்கலாம், அல்லது ஒரு விசேஷித்து தேவையாக இருக்கலாம். பின்பு பிரசங்கியார் மற்றும்/அல்லது மூப்பர்கள் ஒரு அறிவிப்பை வெளியிடுகின்றனர்: "நமக்கு இவ்வளவு பணம் தேவைப்படுகிறது. தயவுசெய்து உதவுங்கள்." ஒருவேளை நன்கொடைகள் வரலாம்; ஒருவேளை அது வராதிருக்கலாம். எனவே அதிகமான அறிவிப்புகள், பிரசங்கங்கள், தகவல் அறிக்கைகள் ஏற்படுத்தப்படுகின்றன. நடத்துனர்கள் உறுப்பினர்களிடத்தில் *வேண்டுகோள் விடுக்கின்றனர்*: "தயவுசெய்து கொடுங்கள்! இந்தத் தேவையைச் சந்திப்பதற்கு நாம் இவ்வளவு தொகை கொண்டிருக்க வேண்டும். தயவுசெய்து உதவுங்கள்!"

மக்கெதோனியர்கள் எவ்வாறு கொடுத்தனர் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அதைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன என்று சிந்தித்துப் பாருங்கள்: "மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள் … தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள். மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், …"

அது யாவும் அர்த்தப்படுத்துவது என்ன? ஒருவேளை பின்வருவது போன்ற உரையாடல் பவுலுக்கும் மக்கெதோனியர்களுக்கும் இடையில் நடைபெற்றிருக்கலாம்:

> மக்கெதோனியர்கள்: பவுல் அவர்களே, இதோ நாங்கள் வாக்களித்தபடியான எங்கள் கொடை.
>
> பவுல்: மிக்க நன்றி. இதோ நான் இதை எண்ணிப்பார்க்கிறேன் … ம்ம் … நான் எதிர்பார்த்ததை விட இங்கு அதிகமாக உள்ளது.
>
> மக்கெதோனியர்கள்: நல்லது, நாங்கள் அவ்வளவு கொடுக்க வேண்டும் என்று விரும்பினோம்.
>
> பவுல்: நீங்கள் உங்கள் வருவாய்க்குத் தக்கபடி கொடுத்திருக்கிறீர்கள் என்பது நிச்சயம்.
>
> மக்கெதோனியர்கள்: நாங்கள் அவ்வாறு கொடுக்க விரும்பினோம்; கிறிஸ்தவர்கள், தாங்கள் பெற்றுள்ள வளத்திற்குத் தக்கதாகக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம்.
>
> பவுல்: ஆனால் இது உங்கள் வளத்தைக் காட்டிலும் உண்மையில் மிகவும் அதிகமாக உள்ளது; இது உங்களால் கொடுக்க முடிவதைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. நீங்கள் எவ்வளவு ஏழைகளாக இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன், இந்தக் கணக்கில் நீங்கள் எவ்வளவு கொடிய

உபத்திரவத்தில் இருக்கிறீர்கள் என்பதையும் நான் அறிவேன். நீங்கள் உண்மையில் இவ்வளவு அதிகமாய்க் கொடுக்க இயலாது!

மக்கெதோனியர்கள்: ஆனால் நாங்கள் அவ்வளவு கொடுக்க விரும்பினோம்; கர்த்தர் எங்களுக்குச் செய்துள்ளது பற்றி நாங்கள் மிகுந்த சந்தோஷமாக உணருகிறோம் மற்றும் நாங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றிருப்பதால் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்!

பவுல்: உங்களின் மிகுதியான சந்தோஷத்தை நான் பாராட்டுகிறேன், ஆனால் ஏழைகளாக இருக்கும் நீங்கள் இதைச்செய்ய நான் அனுமதிக்க முடியாது; உங்களால் இவ்வளவு கொடுக்க இயலாது; இது நியாயமான தல்ல! மற்றவர்களுக்கு உதவிசெய்வதற்காக நீங்கள் உங்களையே இன்னும் அதிகமான வறுமைக்கு உள்ளாக்கிக் கொள்ளுதல் சரியானதல்ல! இதில் ஒருபகுதிப் பணத்தையாவது நீங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள வேண்டும்!

மக்கெதோனியர்கள்: இல்லை, பவுலே அதை நாங்கள் செய்யமாட்டோம்! எருசலேமில் இருக்கிற பரிசுத்தவான்களுக்கு உதவ முடிபவர்களாக இருப்பதை நாங்கள் ஒரு தயவாகக் கருதுகிறோம். அவர்கள் எங்கள் சகோதர சகோதரிகளாக உள்ளனர், எங்களைக் காட்டிலும் அவர்களுக்கு இப்பணம் அதிகமாய்த் தேவைப்படுகிறது! இவை எல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக்கோண்டு போக வேண்டும்!

பவுல்: இல்லை, என்னால் முடியாது! நீங்கள் மிகவும் அதிகமாகக் கொடுக்கிறீர்கள்! நீங்கள் இவ்வளவு அதிகமாகக் கொடுக்கக் கூடாது. இதோ இதைத் திரும்ப எடுத்துக்கொள்ளுங்கள்.

மக்கெதோனியர்கள்: இல்லை, நாங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள மாட்டோம். நீங்களே இதை எடுத்துக்கொள்ளுங்கள்; இதைக் கொடுப்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

பவுல்: நான் வலியுறுத்துகிறேன். நீங்கள் மிகவும் அதிகமாகக் கொடுக்கிறீர்கள்!

மக்கெதோனியர்கள்: நீங்கள் இதை எடுத்துச் செல்ல வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்; நாங்கள் கொடுக்க வேண்டியிருப்பதால் இதை நாங்கள் கொடுக்கவில்லை; சுயாதீனமாகக் கொடுக்கிறோம்!

பவுல்: இல்லை, இல்லை, இல்லை! நான் உங்கள் பணத்திலிருந்து இவ்வளவு அதிகமாக எடுத்துச்செல்ல மாட்டேன்!

மக்கெதோனியர்கள்: சரி, அப்படியென்றால் நாங்கள் வலியுறுத்தும்போது நீங்கள் கவனிக்கமாட்டீர்கள், நாங்கள் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து எங்கள் கொடை முழுவதையும் எடுத்துச் செல்லுங்கள்! நாங்கள் முழுங்கால் படியிடுகிறோம், நாங்கள் கெஞ்சுகிறோம், நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம். தயவுசெய்து இந்தக் கொடை முழுவதையும் எடுத்துச் செல்லுங்கள். நாங்கள் கொடுக்க விரும்பிய யாவற்றையும் கொடுக்கத் தயவுசெய்து எங்களை அனுமதியுங்கள். உங்களிடத்தில் விருப்பார்வ மாய் நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

பவுல்: ஆனால் நீங்கள் இவ்வளவு அதிகமாய்க் கொடுக்கிறீர்களே ...

மக்கெதோனியர்கள்: நாங்கள் உங்களிடத்தில் வேண்டுகோள் விடுக்கிறோம்; நாங்கள் உங்களை விருப்பார்வத்துடன் வேண்டிக்கொள்கிறோம்: தயவுசெய்து எங்களைக் கொடுக்க அனுமதியுங்கள் ...

பவுல்: நல்லது, மிகவும் சரி, நான் உங்கள் கொடையை எடுத்துச் செ வேன், இது உங்கள் திராணிக்கு மிஞ்சினதாக இருந்தாலும், நீங்கள் இந்த நற்காரியத்தில் பங்குள்ளவர்களாக இருக்கும் தயவிற்காக எங்களை விருப்பார்வத்துடன் வேண்டிக்கொண்டபடியால், இதை எடுத்துச் செய் வேன்.

இப்போது கேள்வி பின்வருமாறு உள்ளது: மக்கெதோனியர்களின் கொடுத்தலுடன் ஒப்பிடுகையில் நமது கொடுத்தல் எவ்வாறு உள்ளது? அது அவர்களுடைய கொடுத்தலுடன் ஒப்பிடப்பட்டது என்றால், தனிநபர்கள் என்ற வகையில் நாம் எவ்வளவு கொடுப்போம்? நமது வாராந்திரக் காணிக்கை எவ்வளவாக இருக்கும்?

**அவர்கள் முதலில் தங்களையே கொடுத்தனர்**

பவுல், “மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்” என்று கூறினார். மக்கெதோனியர்கள் உதாரத்துவ மாய்க் கொடுத்தனர் என்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை! அவர்கள் தங்களையே கொடுத்தனர்! இயேசுகிறிஸ்துவுக்கு உங்களை முழுமையாக அர்ப்பணிப்பதன் மூலம், நீங்கள் முதலில் உங்களையே கொடுத்தால், பின்பு உதாரத்துவமான கொடுத்தல் தொடரும்.

நாம், கிறிஸ்துவுக்குள்ளான சீஷர்களாக இருத்தல் என்பது நமது பணத்தை நாம் பயன்படுத்துதலைப் பாதிக்கக் கூடாது என்ற கருத்தை நாம் கொண்டுள்ளோம் என்பதில்தான் இடர்ப்பாடு உள்ளது. ஒரு கேலிச்சித்திரம் சித்தரித்த அதே விஷயத்தைச் செய்ய நாம் முயற்சி செய்கிறோம். அது ஒரு மனிதர் ஞானஸ்நானம் பெறுவதைக் காண்பித்தது. அவர் தனது ஒரு கை தவிர மற்ற உடல்பகுதி யாவும் தண்ணீருக்குக் கீழ் இருக்கச் செய்தார், அந்தக் கையை அவர் தண்ணீருக்கு மேலாகத் தூக்கிக் கொண்டு இருந்தார், அதில் அவர் தனது பணப்பையைப் பற்றிக்கொண்டிருந்தார். அந்தப் படத்தின் கீழ் பின்வரும் தலைப்பு இருந்தது: “கர்த்தாவே, எனது சட்டைப்பைப் புத்தகத்தைத் தவிர மற்ற ஒவ்வொன்றும் உமக்கே.” நாம் இயேசுவுக்கு நம்மையே கொடுக்கலாம், சட்டைப்பைப் புத்தகத்தைத் தவிர மற்ற எல்லா வற்றையும்! ஆனால் அது உண்மையாக மனமாற்றமாக இருப்பதில்லை. “எல்லாம் இயேசுவுக்கே” என்பது “சட்டைப்பைப் புத்தகம்” - பணம் - மற்றும் யாவும் என்று அர்த்தப்படுகிறது!

நிருபத்தின் இந்தப் பகுதியில் பவுல், “அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்” என்று கூறுவதன் மூலம் தமது வேண்டுகோளை முடித்தார் (2 கொரிந்தியர் 8:7). இதைப்போன்ற சிலவற்றை நாம் கூற முடியும். சபையானது பல விஷயங்களில் மேன்மையடைகிறது:

நீங்கள் உங்கள் நட்புறவுத்தன்மைக்காக, ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள உங்கள் அக்கறைக்காக, உங்களிடம் உள்ள மேன்மையான போதகர்களுக்காக, கர்த்தருடைய ஊழியத்தில் உண்மைநிறைந்த முயற்சிகளுக்காக, மற்ற இடங்களில் ஊழியம் மற்றும் உபசாரச் செயல்களில் உங்கள் பங்கேற்புக்காகப் பாராட்டப்பட வேண்டும். இப்போது நாங்கள் உங்களுக்கு அறைகூவல் விடுக்க எங்களை அனுமதியுங்கள்: கொடுத்தலில் கிருபை என்ற "இந்த கிருபையுள்ள ஊழியத்திலும் நீங்கள் மேன்மையடைந்திருக்கும்படி பாருங்கள்!" உலகத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் உதாரத்துவத்தின் உதாரணமாக இருக்க நாம் கற்றுக்கொள்வோமாக!

## கர்த்தர் மீதான நமது அன்பின் காரணமாக நாம் உதாரத்துவமாகக் கொடுக்க வேண்டும்

2 கொரிந்தியர் 8:8ல் பவுல், கொரிந்தியர்களின் கொடையானது, அவர்களின் அன்பு உண்மையானது என்று நிரூபிக்கும் என்று பவுல் கூறுகிறார்; 24ம் வசனத்தில் அவர் பின்வருமாறு கூடுதலாகக் கூறுகிறார்: "ஆதலால் உங்கள் அன்பையும், நாங்கள் உங்களைக்குறிந்துச் சொன்ன புகழ்ச்சியையும், சபைகளுக்கு முன்பாக அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்துங்கள்." நீங்கள் கொடுப்பது எதுவோ அது உங்களால் கொடுக்க முடிவதுடன் ஒப்பிடப்படுதல் என்பது நீங்கள் எவ்வளவாகத் தேவன்மீது அன்புகூருகிறீர்கள் என்பதற்குச் சான்றாக உள்ளது!

ஆனால், கர்த்தருக்குக் கொடுக்கப் போதிய அளவுக்கு அவர்மீது நாம் ஏன் அன்புகூர வேண்டும்? 2 கொரிந்தியர் 8:9ல் பவுல், "நம்முடைய கர்த்தராகிய இயேகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" என்று கூறுகிறார். நம்முடைய கர்த்தர் நமக்காக என்ன செய்தார்? "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தார், ..." பரலோகத்தில் அவர் இருந்த மகிமையைக் கற்பனை செய்து பாருங்கள்! "அவர் தரித்திரரானார், ..." அவர் பூமியின்மீது எவ்வளவு தரித்திரராயிருந்தார் என்பதைப் பற்றியும் நமக்காக அவர் மரணம் அடைந்ததைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள். அவர் மனப்பூர்வமாக அந்த தியாகத்தைச் செய்தது ஏன்? "நீங்கள் ... ஐசுவரியவான்களாகும்படிக்கு." கிறிஸ்து வருவதற்கு முன்னர் நாம், இழந்துபோகப்பட்டிருந்தோம், நம்பிக்கையில்லாதிருந்தோம், ஆவிக்குரிய வகையில் வறுமையால் தாக்கப்பட்டிருந்தோம். இப்போது நாம் எவ்வாறு நிற்கிறோம்? நாம் இரட்சிப்பைக் கொண்டிருக்கிறோம், பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறோம், பரலோகத்தின் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறோம். நாம் தரித்திரர்களாக இருந்தோம், இப்போது நாம் ஐசுவரியவான்களாக இருக்கிறோம்! நமது உடமைகளை நாம் எங்கிருந்து பெற்றுக்கொண்டோம்? "நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, ..." கிறிஸ்துவினிடத்தில் இருந்து! அவர் பரலோகத்தைவிட்டு வந்திருந்த படியால், நாம் பரலோகத்திற்குச் செல்ல முடியும்! அதைக் காட்டிலும் நாம் வேறு எவ்வகையில் ஐசுவரியவான்களாக இருக்க முடியும்?

தேவனுடைய கொடைக்குத் தக்கவகையிலான பதில் செயல்

*என்னவாக உள்ளது? நாம் தேவன்மீது அன்புகூர வேண்டும், மற்றும் நாம் அன்புகூருவதால், நாம் கொடுக்க வேண்டும்! நீங்கள் தேவன் மீது எவ்வளவாக அன்புகூருகிறீர்கள்? அவர்மீது அன்புகூருகிறேன் என்று சொல்வது மாத்திரம் நீங்கள் அதைச் செய்கிறீர்கள் என்று நிரூபிக்காது. உங்கள் அன்பைச் செயல்விளக்கப்படுத்துவதற்கு, அவருக்குக் கொடுங்கள்! நீங்கள் கொடுக்கும்போது, "நான் தேவன்மீது இவ்வளவாக அன்புகூருகிறேன்" என்று கூறுகிறீர்கள். உங்கள் அன்பிற்குச் சாட்சியாக உங்கள் கொடுத்தலில் நீங்கள் திருப்தி அடைகிறீர்களா?*

## நமது வாக்குறுதிகளை நிறைவேற்ற நாம் கொடுக்க வேண்டியதாக உள்ளது

*2 கொரிந்தியர் 8:10-15ஐ ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.*

*நாம் எவ்வாறு கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?* "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரிந்தியர் 9:7). *மனப்பூர்வமாகக்* கொடுத்தலே ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது - ஒவ்வொருவரும் என்ன கொடுக்க வேண்டும் என்பதைத் தமக்குத்தாமே தீர்மானம் செய்கிறார்; வலுக்கட்டாயமாக அல்ல - *உற்சாகமாக, மனப்பூர்வமாகக்* கொடுக்க வேண்டும்; *நீங்கள் தாம் கொடுக்க வேண்டும்* - உங்களுக்காக வேறு எவரும் கொடுக்க முடியாது; மற்றும் *திட்டமிட வேண்டும்* - ஒவ்வொருவரும் "தமது மனதில் நியமித்தபடியே" கொடுக்க வேண்டும்.

கொரிந்தியர்கள், பவுலின் தேவையைச் சந்திப்பதற்குக் கொடுக்கும்படி ஒரு ஆண்டுக்கு முன்பாகவே தீர்மானித்து இருந்தனர் (2 கொரிந்தியர் 8:6, 10; 9:2). இப்போது அப்போஸ்தலர், "அதை அவர்கள் விரும்புவதின் ஆயத்தமானது அதை அவர்கள் நிறைவேற்றுவதினால் பொருத்தம் செய்யப்படும்படிக்கு," அவர்கள் செய்யத் திட்டமிட்டு இருந்ததைச் செய்யும்படி அவர்களை வேண்டிக்கொள்கிறார் (2 கொரிந்தியர் 8:10, 11). அவர்கள் ஏன் தங்களின் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்? ஏனென்றால் பவுல், கொரிந்தியர்கள் வாக்களித்து இருந்ததையும் - மற்றும் அவர்கள் கொடுக்கத் தவறினால், பவுல் சிறுமைப்படுத்தப்படுவார், மற்றும் அவர்களும் சிறுமைப்படுத்தப்படுவார்கள் என்ற ஒரு விஷயத்திற்காக அவர்கள் அதை நிறைவேற்ற வேண்டும் என்று பவுல் கூறுகிறார்! (2 கொரிந்தியர் 9:1-5).

*இந்தக் கருத்தை நாம் நமக்கு எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும்?* முதலாவது நாம், நமது கொடுத்தல் திட்டமிடப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இரண்டாவது நாம், கொடுத்தல் பற்றித் தேவனுக்கு ஒரு வாக்குறுதியை ஏற்படுத்தும்போது, இயன்ற வரையில் அந்த வாக்குத்தத்தத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மூன்றாவது நாம், ஒரு கருத்தில் நாம் கிறிஸ்தவர்கள் ஆகும்போது, நாம் உதாரத்துவமாய்க் கொடுப்போம் என்று தேவனுக்கு ஒரு வாக்குறுதியை ஏற்படுத்துகிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.கொடுக்கத் தவறுதல் என்பது, நம்மையே நாம் தேவனுக்குக் கொடுத்தபோது நாம் ஏற்படுத்திய ஒரு புனிதமான வாக்குறுதியைச் செயல்படுத்தத் தவறுவதாக உள்ளது.

## நமது கொடுத்தல் நேர்மையாக நிர்வகிக்கப்படும் என்பதால் நாம் கொடுக்க வேண்டும்

*2 கொரிந்தியர் 8:16-9:5ஐப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். சேகரித்த பணமானது நேர்மையாக நிர்வகிக்கப்படுதலை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் பவுல் மேற்கொண்ட கவனத்தைக் கவனியுங்கள். அந்த ஊழியமானது வாய்மையுடன் செயல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பவுல் தம்முடன் பயணம் செய்வதற்கு பல்வேறு சபைகளில் இருந்து நல்ல மனிதர்களைப் பெற்றுக்கொள்கிறார். இந்த ஏற்பாட்டில் அவரது குறிக்கோள் பின்வருமாறு: "எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்" (2 கொரிந்தியர் 8:20, 21).*

*இதிலிருந்து நாம் இரு விஷயங்களைக் கற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது: (1) இன்றைய நாட்களில் சபை நடத்துனர்கள், சபையின்விஷயங்கள் - "கர்த்தருக்கு முன்பாகமாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும்" மதிப்பிற்குரிய முறையில் செய்யப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, அவற்றைத் தாங்கள் நிர்வகிப்பதில் கவனமாக இருக்க வேண்டும். (2) சபையின் நிதிகளை நிர்வகிக்க, சபை நடத்துனர்கள் மேற்கொள்ளும் மாபெரும் கவனத்தின் காரணமாக, கிறிஸ்தவர்கள் உதாரத்துவமாகக் கொடுக்க மனவிருப்பமாக இருக்க வேண்டும்.*

## நமது கொடுத்தலின் மூலமாக நாம் செய்கிற நன்மையின் காரணமாக நாம் கொடுக்க வேண்டும்

*2 கொரிந்தியர் 9:6-15ஐ நாம் ஒன்றாக வாசிப்போமாக.*

**நமக்காக**

*கொரிந்தியர்கள் தாராளமாகக் கொடுத்தால், அவர்கள் எப்போதும் போதுமானவற்றைக் கொண்டிருக்கும்படியும் ஒவ்வொரு நற்செயலிலும் உதவுபவர்களாக இருக்கும்படியும், அவர்களுக்குத் தேவன் சகல ஆசீர்வாதங்களையும் சம்பூரணமாய்க் கொடுப்பார், அவர்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருகச் செய்வார்; மற்றும் அவர்களின் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார். நாம் தாராளமாகக் கொடுத்தால், நாம் அதே வழிகளிலேயே ஆசீர்வதிக்கப்படுவோம். ஒருவேளை நாம் போதுமான அளவு கொடுக்காதிருப்பதால் கர்த்தருடைய ஊழியத்தில் செயல்விளைவற்றவர்களாக இருக்கலாம்.*

**மற்றவர்களுக்காக**

*2 கொரிந்தியர் 9:12, 13ஐக் கவனியுங்கள். கொரிந்தியர்களின் கொடையானது, "பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்கும்" மற்றும் பிறரும் பயனடைவார்கள். நமது கொடுத்தலினால் எத்தனை தேவைகள்*

*சந்திக்கப்படுகின்றன? ஆராதிக்கக்கூடும்படி, வகுப்புகளில் வேதாகமத்தைப் படிக்கும்படி, முறையான பிரசங்கித்தலுக்கு நாம் வசதி*

யான இடத்தைக் கொண்டுள்ளோம். உறுப்பினர் அல்லாதவர்கள் முறையாகப் போதிக்கப்படுகின்றனர், நமது உபகாரத் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது, மற்றும் பிற இடங்களில் உள்ள இழந்து போகப்பட்டிருப்பவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்படும் வாய்ப்பைப் பெறுகின்றனர். நீங்கள் கொடுக்கும்போது உங்கள் ரூபாய்கள் செய்கிற நன்மை யானது நித்தியத்தில் மட்டுமே அறியப்படும்!

**தேவனுக்காக**

ஒரு கருத்தில், நாம் கொடுக்கிற எதுவும் தேவனுக்குப் பிரயோஜனமாவ தில்லை. தேவன் உயிர் பிழைப்பதற்கு நமது கொடைகள் தேவையில்லை. ஆனால் இன்னொரு கருத்தில், தேவனுக்கு நமது உதவி தேவைப்படுகிறது. மனிதகுலத் திற்கு இரட்சிப்பைத் தேவன் தமது மக்கள் மூலமாக மாத்திரமே கொண்டுவர முடியும், அது ஒன்றே அவருக்கு வழியாக உள்ளது. அந்தக் காரணத்திற்காக நாம் நம்மையும் நமது பணத்தையும் அர்ப்பணிக்கத் தவறினால், வேறுவகையில் இரட்சிக்கப்படக் கூடியவர்களில் சிலர் இழந்து போகப்படலாம். மற்றும், எல் லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதால் (2 பேதுரு 3:9), மேற்கூறியது நடைபெறுவதை அவர் விரும்புவதில்லை.

ஆனால், கொரிந்தியர்களின் கொடையானது "தேவனை ஸ்தோத்தி ரிப்பதையும்" மற்றும் "தேவனை மகிமைப்படுத்துவதையும்" உண்டாக்கும். அதுபோலவே, நமது கொடைகளினால் எவ்வளவு அதிகம் நன்மை செய்யப்படுகிறதோ, அவ்வளவு அதிகமாய் மனிதர்கள் தேவனைத் துதித்து அவருக்கு நன்றி செலுத்துவார்கள்! உண்மையில் அதுவே நமது இலட்சியமாக உள்ளது: நமக்கு மகிமையைப் பெற்றுக்கொள்ளுதல் அல்ல, ஆனால் "இவ்வித மாய் மனுஷர் [நமது] நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற [நமது] பிதாவை மகிமைப்படுத்தும்படி." என்பதே நமது நோக்கமாக இருக்கிறது (மத்தேயு 5:16).

**சகோதரத்துவத்திற்காக**

ஒருவேளை, பவுல் ஊழியம் செய்திருந்த புறஜாதியாரில் உண்டான சபைகளுக்கும் யூதேயாவில் இருந்த யூதமக்களைக் கொண்ட சபைகளுக்கும் இடையில் நிலவிய உறவை மேம்படுத்துதல் என்பது இந்தக் கொடையின் முதன்மைக் குறிக்கோளாக இருந்திருக்கலாம். எருசலேமுக்குக் கொடைகளை அனுப்புவதினால், புறஜாதிக் கிறிஸ்தவர்கள் யூதக்கிறிஸ்தவர்கள்மீதான தங்களுடைய அன்பைக் காண்பிப்பார்கள், மற்றும் சகோதரத்துவத்தில் இருந்த "யூதர்கள் மற்றும் புறஜாதியார்கள்" என்ற இரு பிரிவினரும் அன்பில் ஒன்றாக நெருக்கமாய்க் கொண்டுவரப்படுவார்கள்.

இது, ஒரு சபையானது இன்னொரு சபைக்கு உதவுகையில் இன்றும் நடைபெறுகிறது; இரு சபைக் குழுமங்களும் அன்பில் ஒன்றுகூட்டி நெருக்க மாகக் கொண்டுவரப்படுகின்றன. அத்துடன் கூடுதலாக, எந்த சபையும் கொடுக்கும் ஒவ்வொரு வேளையிலும் அது எல்லாருக்கும் உதவுகிறது. பல சபைகள், போலந்தில் பஞ்சத்தினால் தாக்கப்பட்ட மக்களின் தேவையைச் சந்திக்க உதவும்படி கொடுத்தபோது, அவர்களின் உதாரத்துவத்தில் இருந்து முழு சகோதரத்துவமும் பயனடைந்து.

## தேவன் நமக்குச் செய்துள்ளவற்றின் காரணமாக, நாம் கொடுரும்படி நம்மை அவர் உற்சாகப்படுத்துகிறார்

2 கொரிந்தியர் 9:15 பின்வருமாறு கூறுகிறது: "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.'' இது, தேவன் நமக்குச் செய்துள்ளவற்றின் காரணமாக நாம் அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறது.

தேவன் நமக்கு எவ்வளவு கொடைகளை அருளியிருக்கிறார்? நம்மிடத்திலுள்ள நன்மையான ஒவ்வொரு விஷயமும் அவரிடத்தில் இருந்தே வருகின்றன! ஆனால் நமது விவரிப்பின் வல்லமைகள் யாவற்றிற்கும் அறைகூவல் விடுக்கும் "சொல்லிமுடியாத ஈவு" என்பது ஒன்றே ஒன்றுதான், ஒரே ஒரு கொடைதான் உள்ளது. அது என்ன? அது, நாம் இரட்சிக்கப்படும்படிக்குத் தேவனுடைய குமாரன் நமக்காக மரித்த நிகழ்வே ஆகும். அந்தக் கொடையைப்பற்றிப் பவுல், "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" என்று கூறுகிறார் (ரோமர் 5:8, 9; மேலும் காண்க யோவான் 3:16; 1 யோவான் 3:16; எபேசியர் 3:18, 19).

இது கர்த்தருக்கு அதிகம் கொடுக்கும்படிக்கு நம்மைத் தூண்டுவதில் எவ்வளவு ஆச்சரியமான ஊக்குவித்தலாக உள்ளது! நாம் உதாரத்துவத்துடன் கொடுக்கிறவர்களாக இருக்கிறோம் என்று நாம் நினைக்கத் தொடங்கும்போது, தேவனுடைய கொடையுடன் நமது அன்பு, நமது நல்லிணக்கப் பண்பு, நமது கொடைகள் ஆகியவற்றை ஒப்பிட வேண்டும்!

## முடிவுரை

நீங்கள் உங்களையே கொடுத்திருக்கிறீர்களா? கொடுத்தலினால் நீங்கள் பரலோகம் செல்லும் வழியை வாங்க முடியாது. விசுவாசத்தில் பதில்செயல் செய்தல் மற்றும் தேவனுடைய அன்பிற்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் நீங்கள் பரலோகத்தைப் பெறலாம். நீங்கள் அவற்றைச் செய்யும்போது கிறிஸ்துவின் இரத்தத்தினால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. பின்பு "உங்கள் பணம் மற்றும் உங்களுக்குள்ள ஒவ்வொன்றையும்" கொடுத்தல் என்பது பரலோகத்திற்குப் பயணச்சீட்டை வாங்கும் வழியாவதில்லை, ஆனால் அது தேவன் உங்களுக்குச் செய்துள்ளவற்றிற்கு நீங்கள் நன்றி செலுத்துதலாக உள்ளது. உங்களையே கொடுங்கள் ... கிருபையினால் இரட்சிக்கப்படுங்கள் ... மற்றும் உங்கள் பணத்தைக் கொடுத்தல் என்பது பின்தொடரும்.